போவதால், அந்த இடத்தில் சுற்றுலா மையம் அமைத்தால் நலமாக இருக்கும். இனியேனும் அதுசம்பந்தமாக அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு உறுப்பினரின் யோசனை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பகுதிநேரத் தொழிலாசிரியர்கள்.

*625 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

பகுதிநேரத் தொழிலாசிரியர்களை முழுநேரத் தொழிலாசிரியர்களாக மாற்றி அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகுதிரு. செ. அரங்கநாயகம் : முழுநேரக் கைத் தொழில் ஆசிரியர்களுக்குரிய தகுதிகள் இருந்தும் பகுதிநேரக் கைத்தொழில் ஆசிரியர்களாக உயர்தொடக்கப் பள்ளிகளில் பணி செய்து வந்தவர்கள் சுமார் 800 பேருக்கு 1974–75 முதல் 1977–78 முடியவுள்ள காலத்தில் முழுநேரப் பதவிகள் அளிக்கப்பட்டன. மீதம் இருக்கும் சுமார் 1,200 பகுதிநேரக் கைத் தொழில் ஆசிரியர்களுள் பெரும்பாலோர் முழுநேரப் பதவிக்குரிய தகுதி இல்லாதவர்கள் எனத் தெரியவருகிறது. அவர்களுள் ஓரளவு தகுதி படைத்தவர்கள் சிலருக்காவது இனிவரும் ஆண்டுகளில் முழுநேரப் பதவிகள் அளித்திட இயலுமா என்பது ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பகுதிநேரத் தொழில் ஆசிரியர்களாக உள்ளவர்கள் ஆயிரத்திற்கும்மேற்பட்டவர்கள்இன்னும் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்களை எல்லாம் கூடுமான வரையில் முழுநேர ஆசிரியர்களாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அவர்களுக்கு மாதம் ரூ. 60 தான் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அதையாவது, உயர்த்திக் கொடுக்க இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அதைப் பரிசீலிக்கலாம.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் பயிற்சித் தொழிலாசிரியர்களுக்கு அரசு உயர்நிலைப் பள்ளிகளிலே ரூ. 210 என்றும், அதே தகுதி உடைய

1978 மார்ச் 20

ஆசிரியர்களுக்கு உயர் துவக்கப் பள்ளிகளிலே ரூ. 150 என்றும் அடிப்படைச் சம்பளம் இருப்பதை மாற்றி, உயர்பள்ளி ஆசிரியர்களுக்குக் கொடுப்பதைப் போல் நடுநிலை, மற்றும் உயர் துவக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கும், ஒரே தகுதி உடைய ஆசிரியர்களுக்கும் ஒரே ஊதியங்கள் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, மூன்றாவது சம்பளக் கமிஷனுடைய அறிக்கைக்குப் பிறகு இதை நாம் பரிசீலிக்கலாம்.

திரு. என். பழனிவேல் : இந்தப் பகுதி நேர ஆசிரியர்களுக்கு ரூ. 60 மட்டும் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அந்த ரூ. 60 டவுன் பஸ் சார்ஜுக்குக் கூடப் போதுமானதாக இல்லை. ஆகவே, முழு நேர ஆசிரியர்களாக மாற்றாவிட்டாலும்கூட, சம்பளத்தையாவது ரூ. 120 ஆகக் கொடுக்கின்ற செயற்குறிப்பு இந்த அரசிடம் ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, சம்பளக் கமிஷனுடைய அறிக்கைக்குப் பிறகு அதைப் பார்த்துக் கொள்ளலாம்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, பகுதி நேரத் தொழில் ஆசிரியர்களுக்குள் பலர் தகுதி இல்லாதவர்கள் என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு தகுதி அளிக்கக்கூடிய அளவில் 'இன் சர்வீஸ் டிரெயினிங்'க்கு ஏற்பாடு செய்யப்படுமா? அல்லது கடந்த காலப் பணியை வைத்து, இந்த ரூல்ஸை ரிலாக்ஸ் செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இந்தப் பிரச்னைகள் எல்லாம் சம்பளக்கமிஷனுடைய பரிசீலனைக்கு உட்பட்டவைகளாக இருக்கின்றன. அவர்களது அறிக்கைக்குப் பிறகு நாம் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலெல்லாம் படிக்காமலும் பட்டம் பெறாமலும் இருப்பவர்களெல்லாம் ஆயாக்களாக இருந்து சம்பளம் ரூ. 120, ரூ. 140 வாங்குவது அரசுக்குத் தெரியுமா? ஆகவே, படித்து, பட்டம் பெற்றவர்கள் இந்தக் குறைந்த சம்பளத்தில் இருப்பதை மாற்றியமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழில் ஆசிரியர்கள் சம்பந்தமாக பகுதி நேரம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர்கள் ஓராண்டுக் காலம் பணிபுரிந்தால் அவர்களை நிரந்தரமாக்கி, அதற்குரிய ஊதியத்தை அவர்களுக்கு அளிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தப் பிரச்னைகள் முழுவதும் மூன்றுவது சம்பளக் கமிஷன் பரிசீலனைக்கு உட்பட்டதாகும். ஆகவே, அவர்களுடைய அறிக்கைக்குப் பிறகு நாம் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம் என்பதை நான் முதலிலேயே சொல்லியிருக்கிறேன்.

(முற்பகல் 9-10)

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் தந்தார்கள். உயர்நிலைப் பள்ளிகளிலும் நடுநிலைப் பள்ளிகளிலும் குறைந்த சம்பளத்தைப் பெற்று பணியாற்றுகிறவர்கள் இந்தக் கணக்கில் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன். மேலும் நடுநிலை பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் பணியாற்றுகிறவர்களை முழு நேர ஊழியர்களாக ஆக்கவேண்டுமென்று ஆணை இருக்கிறதே. அந்த ஆணையை நிறைவேற்ற வேண்டும் என்று ஆணையர்களை இந்த அரசு கேட்டுக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒன்றியப் பள்ளிகளிலேயும் அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்டவர்களுடைய பிரச்சினையை நாம் அந்த் அறிக்கைக்குப் பிறகு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அதுமட்டுமல்ல, ஹையர் செகன்டரி பள்ளிகள் வரும்போது அதிலேயும் பகுதி நேர ஊழியர்களைப் போடுகின்ற வாய்ப்பிருக்கிறது. ஆகவே பொதுவாகவே பகுதி நேர ஊழியர்களைப் பற்றிய முடிவை அரசு எடுக்க வேண்டியதாக இருக்கிறது.

பள்ளியிறுதி, புகுமுக வகுப்புகளில் தேருத மாணவர்கள்.

* 626 வினா— திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—